சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் :07.12.2024

வா.சா.1 - கோபாலகிருஷ்ணன் S/o செல்வம்

O.S No.347/2022 :

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

வழக்கு சொத்து ஆதியில் வீராச்சாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அவர் கடந்த 20.03.2010ல் இறந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். வீராச்சாமிக்கு எதிராக பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கு மேல்முறையீடு செய்யப்பட்ட A.S. No.38/2010 மேல்முறையீடு வழக்கானது கடந்த 22.03.2011 அன்று இதே நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நிலுவையில் இருக்கும் போதே, வீராச்சாமி இறந்துவிட்டதால் அதை பற்றியவிபரம் அவரது மகனான வீரக்குமாருக்கு தெரியாது. வீராச்சாமியுடைய இறப்புச்சான்றிதழ் நகலை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். வீரக்குமார் என்பவர் வீராச்சாமியின் வாரிசே அல்ல என்றால் அது பொய்யாகும். வீரக்குமார் என்பவரது பெயரில் வீராச்சாமியின் வாரிசு என்று பொய்யாக குறிப்பிட்டு பட்டா, சிட்டா ஆகிய ஆவணங்களை போலியாக தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. வீராச்சாமி மகன் வீரக்குமார் என்று பொய்யாக ஆவணங்களை உற்பத்தி செய்து அதனடிப்படையில் விற்பனை ஆவணம் சதீஷ்குமார் பெயருக்கு மாற்றியுள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் இருந்து சொத்தை பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மோசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்து, இந்த

வழக்கை மோசடியாக விபரங்களை கூறி தாக்கல் செய்துள்ளோம் என்றும், ஆகவே இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2024.12.07 15:33:33 +0530

**Sub Judge**
**Melur**